பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 06 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மக்களை மையமாகக் கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** உயிரி எரிசக்திப் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் அரசு சட்டக் கல்லூரிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

**4.** மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகள் மற்றும் வட தமிழகத்தின் சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்களை மையமாகக் கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தனியார் ஊடக நிறுவனம் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

25 கோடிக்கும் அதிகமானோர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனை என்று அவர் கூறினார்.

வறுமை ஒழிப்பு என்பது வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான உந்து சக்தியாக திகழ்கிறது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

உயிரி எரிசக்திப் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய உயிரி எரிசக்தி திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

உயிரி எரிசக்தி பயன்பாடு அதிகரிப்பதன் மூலம் **LPG** மற்றும் புதைபடிவ எரிபொருட்களை சார்ந்திருக்கும் நிலையை குறைக்க உதவும் என்றார்.

உயிரி எரிசக்தி திட்டம் ஆண்டுதோறும் **59** லட்சம் கிலோ **LPG** நுகர்வைக் குறைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டம் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன் விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரிக்கும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு சட்டக் கல்லூரிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

நடப்பு கல்வியாண்டில் சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் தர வரிசையில் முன்னணி இடம்பிடித்தவர்களுக்கு சேர்க்கை ஆணைகளை சென்னையில் நேற்று அவர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சென்னையில் மகளிருக்கான சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

**(Voice Byte — Nirmal Kumar — 25 Sec)**

<<<<>>>>

சென்னையில் உள்ள குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் திரு. சரத்குமார் கூறியுள்ளார்.

முதன்மைத் தேர்வுக்கான பயிற்சியை இந்த மையத்தில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

தமிழக மாணவர்கள் அதிக அளவில் குடிமைப் பணி தேர்வுகளில் தேர்ச்சி பெறும் வகையில் பயிற்சிகள் மேம்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாநிலத்தில் சுமார் 18 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்று ஆயிரக்கணக்கானோர் காத்திருக்கும் சூழ்நிலையில், இந்தப் பணியிடங்களை நிரப்ப அரசுக்கு எந்த சிக்கலும் இல்லை என்று திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சீமைக்கருவேல மரங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ வலியுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டு அருகே இதுதொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மரங்களால் ராமநாதபுரம் மாவட்டம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த மரங்கள் வளர்ந்துள்ள பகுதியில் விவசாயம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. வைகோ தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் வரும் 28ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் இம்முகாமிற்காக விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. சரவணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte — Saravanan — 54 Sec)**

<<<<>>>>

கோவையில் உள்ள மத்திய கரும்பு நிறுவனத்தின் சார்பில் கேரள எல்லைப் பகுதியில் பழங்குடியினருக்கான மேம்பாட்டு முகாம் நடைபெற்றது.

இதில் **50**க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Hariharn — 30 Sec)**

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகள் மற்றும் வட தமிழகத்தின் சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில இடங்களில் மாலை அல்லது இரவு நேரத்தில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்தது.

சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.

திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Ravichandran — 30 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவின் மேற்குப் பகுதியில் மின்னணு சாதனங்கள் உற்பத்தி தொழிற்சாலை மீது யுக்ரைன் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததாக ரஷ்யா கூறியுள்ளது.

--------------

நாடு முழுவதும் கரீஃப் பருவத்தில் பயிர் சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் 2 சதவீதம் அதிகரித்துள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------

பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்த உயர் அதிகாரிகள் பங்கேற்கும் 2 நாள் தேசிய கருத்தரங்கம் புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

--------------

7 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்கள் பங்கேற்கும் ஊராட்சி நிர்வாகம் குறித்த மண்டல பயிலரங்கு ஸ்ரீநகரில் பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் சார்பில் இன்று நடைபெறுகிறது.

--------------

நாடு முழுவதும் உடல் உறுப்பு தானம் செய்வதற்காக தாமாக முன்வந்து பதிவு செய்துள்ளோரின் எண்ணிக்கை 5 லட்சம் என்ற மைல்கல்லை எட்டியுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------

சர்வதேச ஒலிம்பிக் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி சென்னையில் மாநில விளையாட்டுத்துறை சார்பில் அது தொடர்பான நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

-------------

*விளையாட்டுச் செய்தி*

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

லண்டனில் இரவு 7 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

**<<<<The End>>>>**